மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 223 /2018

2,4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். - திரு.செல்வன்
த/பெ. - திரு.பெரிய கருப்பசாமி
கிராமம் - இராஜாபுதுக்குடி
தொழில் - விவசாயம்
தாலுகா - கயத்தார்
வயது - 58.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 2 ம்பிரதிவாதி ஆவேன். 4 பிரதிவாதி எனது உடன்பிறந்தவர் ஆவார் அவருக்கும் சேர்த்து எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 21.09.1981 ல் சுப்பையா என்பவர் 1 ம்பிரதிவாதி பெரிய கருப்பசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் 6 தாள்கள் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 04.02.1981 ல் இசக்கிமுத்துசுப்பையாவுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் 12 தாள்கள் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 1 ம்பிரவாதி பெரிய கருப்பசாமி பெயரில் உள்ள கணினிபட்டா எண்.254 நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 24.02.2017 ல் பெரிய கருப்பசாமி 2 ம்பிரவாதி செல்வத்திற்கு எழுதிக்கொடுத்த சொத்து ஏற்பாட்டாவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 24.02.2017 ல் பெரியகருப்பசாமி 4 ம்பிரதிவாதி பாலமுருகனுக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டாவணம் அசல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

( வாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை ஆட்சேபனைக்குட்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.11.2025.